அசல்

25.3.38. த.ச. மீனாட்சிசுந்தரன்

அசல் – 1 நகல் – இல்லை.

Page 103

உ

திருச்சிற்றம்பலம். ஆலங்குடி
25.3.38.

மாட்சிமை சான்ற குருமணி ஐயா அவர்கள் திவ்விய திருவடித் தாமரைகளில் அடியேன் த.ச. மீனாட்சி சுந்தரன் தெண்டனிட்டுச் செய்து கொள்ளும் வணக்கமொழி விண்ணப்பம்.

தண்டமிழ்த் தெய்வத்தி னருளாலும், தேவரீருடைய நல்லாசீர் வாதத்தாலும் அடியேனும், தந்தையார், தம்பி முதலியவர்களும் நலமுடனிருந்து வருகிறோம். அவ்விடம் தேவரீர் திருமேனிப் பாங்குடனிருந்து வருவதற்கும், மற்றும் குருமணி சின்ன ஐயா அவர்களும், திருமிகும் அன்பர்கள் கல்யாணசுந்தரமையரவர்களும், திரு. K. சுப்பிரமணிய ஐயரவர்களும் ஏனையோரும் நலத்துடன் இருக்கும் செய்திகட்கும் திருமுகம் விடுத்தருளப் பிரார்த்திக்கிறேன். அவர்களெல்லோருக்கும் அடியேனுடைய வந்தனமுரித்தாகுக.

அன்புமிக்க திருவாளர்கள்:
வி.மு. சுப்பிரமணிய ஐயரவர்கட்கும், கி.வா ஜகந்நாதையரவர்கட்கும் என் நமஸ்காரம் தெரிவிக்கச் செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

இத்துடன் தேவரீர் திருவா-

அசல்

25.3.38. தி.ச. மீனாட்சிசுந்தரன்

அசல் – 1 நகல் – இல்லை.

வடுதுறையிற் கட்டளையிட்டருளியபடி "திருப்புறம்பயம் ஸ்ரீ சாட்சிநாத சுவாமியுலா' எனக்குக் கிடைத்த கையெழுத்துக் காகிதப் பிரதியையும், அப்பிரதியைப் பார்த்து அடியேனெழுதிய பிரதியொன்றையும் அனுப்பியுள்ளேன். உலா முழுவதுமில்லை. குறைப்பிரதியாகக் காணப்படுவதுடன் இடையிடையே வழுக்கள் நிரம்பியுள்ளனவாகவுங் காணப்படுகிறது. இங்குள்ள சில தமிழ்ப்பற்றுள்ளவர்களிடம் ஏதேனும் ஒன்றிரண்டு பிரபந்தங்களை யச்சிடுதற்குப் பொருளுதவி புரியுமாறு தூண்டியிருக்கின்றேன். அதுவிஷயமாக அடியேனாலியன்ற பொருள் சேகரித்துத் தங்கட்கனுப்பி வைக்கின்றேன். உலாப்பிரதி இன்னும் ஏதேனுங் கிடைக்குமாயினும் தேடியனுப்புவிக்கிறேன். திருப்புறம்பயம் நாயக்கர்வீட்டில் விசாரித்தால் தெரியுமெனத் தேவரீர் கட்டளையிட்டீர்கள். அவர்கள் பெயரின்னதெனக் குறித்தனுப்புமாறும் வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இத்துடன் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சுவாமிக்குச் சாத்திய விபூதிப் பிரசாதமும் வாங்கியனுப்பியிருக்கிறேன். சிரமத்துக்கும், தாமதத்துக்கும் மன்னித்தருள வேண்டிக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்,
தாழ்மையும் வணக்கமுமுள்ள
தி. ச. மீனாட்சிசுந்தரன்.

உலாப்பிரதியின் இறுதியில் 6 செய்யுட்கள் மட்டுமிருக்கின்றன.

39

S